# முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட வரலாற்றில் இடம்பெற்ற திருத்தங்கள் மற்றும்

# முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் ‘மதப்பிரிவு’ இனது உள்ளடக்கம்

# AMENDMENTS MADE IN THE MUSLIM MARRIAGE AND DIVORCE ACT AND THE USEAGE OF WORD "SECT" IN THE RELEVANT ACT

**MHM. Hassan Rushdy**

*Attorney at law*

*Email: mhmhr27@gmail.com*

**Summary**

*It is widely acknowledged that Sri Lankan Muslims have historically enjoyed certain privileges within the legal framework of Sri Lanka. While the early Sinhalese rulers permitted the observance of local Muslim religious laws and customs, they were not formally codified. However, during the Dutch colonial period, Governor Iman Willem Falck, in collaboration with representatives of the Muslim community in Colombo, introduced a distinctive legal code known as the "Shonaher Laws related to Moors and other Muslims." This code was based on the principles of the "Islamic Shari'ah" madhab, which was prevalent in Batavia (modern-day city of Jakarta, Indonesia). Subsequently, in 1806, the British Governor translated this code into English and compiled it as the 'Muhammadan Code', which eventually became law. The enactment of the Muslim Marriage and Divorce Act No. 13 of 1951 marked a significant development in this legal trajectory. While Islamic jurisprudence recognizes 'shari'ah' as the substantive law for Muslims, it is notable that the provisions of the Act mentioned above, which governs Muslim affairs in Sri Lanka, diverge from various 'Shari'ah' legal principles in several respects. Several noteworthy observations emerge concerning the Muslim Marriage and Divorce Act. Firstly, it is pertinent to acknowledge that the majority of Muslims residing in Sri Lanka adhere to the 'Shafi'i' Mazhab, or School of Thought, within Islamic jurisprudence. This adherence shapes their legal interpretation and application within the Sri Lankan context.*

## *1.* முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்ட வரலாற்றில் இடம்பெற்ற திருத்தங்கள்.

*இலங்கை நாட்டின் சட்ட பரப்பெல்லைக்குள் இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு சிறப்புரிமைகளை காலங்காலமாக அனுபவித்து வருகின்றனர் என்பது பொதுவில் ஏற்கப்பட வேண்டிய விடயமாகும். இதனை ஆதாரப்படுத்தும் பிரதான விடயங்களில் ஒன்றாக முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தின் அறிமுகம் மற்றும் அதன் வரலாற்றுத் தோற்றுவாய் ஆகியவற்றினை குறிப்பிடலாம். இறைதூதர் முகம்மது நபி (ஸல்) அவர்கள் மக்கா நகரில் கி.பி.571 இல் பிறந்திருப்பினும் இலங்கைக்கும் மத்திய கிழக்கை சேர்ந்த அறபு வணிகர்களுக்குமான தொடர்பானது அதற்கு முன்பிருந்தே காணப்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இலங்கையினை ஆண்ட சிங்கள மன்னர்களினால் உள்ளூர் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களில் அவர்களின் மார்க்க சட்டங்களும் வழக்காறுகளும் பின்பற்றப்பட ஆரம்ப காலங்களில் அனுமதியளிக்கப்பட்டிருப்பினும் அவையொரு முறைப்படுத்தப்பட்ட வடிவில் காணப்பட்டிருக்கவில்லை. இந்நிலையில் 15 ஆம் நூற்றாண்டளவில் தான் உள்ளூர் முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களை கையாள கொழும்பு பிரதேசத்தினை மையப்படுத்தி ஒரு 'விஷேட நீதிமன்றம்'* (Special Court) *செயற்பட்டதாக அறியக்கிடைக்கின்றது.*

*இலங்கை மீதான காலனித்துவ ஆட்சியின் ஆரம்ப கர்த்தாக்களான போர்த்துக்கேயர் காலத்தில் வணிக சமூகம் என்ற ரீதியில் இலங்கை முஸ்லிம்களுக்கு சாதகமான சூழல் காணப்பட்டிருக்கவில்லை என்பதோடு பல்வேறு தொடர்ச்சியான நெருக்கடிகளினை சந்திக்க நேர்ந்திருந்தது. இவ்வாறு இலங்கை முஸ்லிம்கள் தங்களது தனித்துவ மார்க்க சட்டங்களினையும் உள்ளூர் வழக்காறுகளையும் தாபிக்கப்பட்ட முறையில் பேணுவதற்கு பாரிய சட்ட வெற்றிடம் காணப்படுவதனை உணர்ந்த டச்சு ஆளுநர்* Iman Willem Falck *என்பவர் 'ஷாபி' மத்ஹப்பினை அடிப்படையாக கொண்டு அக்கால 'படாவியா' பிரதேசத்தில் (தற்கால இந்தனோசியாவின் ஜஹார்த்தா நகரம்) பயன்பாட்டிலிருந்த விடயங்களை கொண்டு அக்கால கொழும்பு பிரதேச முஸ்லிம் சமூக பிரதிநிதிகளின் ஆதரவோடு 'சோனகர் மற்றும் பிற முஸ்லிம்களுடன் தொடர்புடைய விஷேட சட்டங்கள்' என்ற தனித்துவ கோவையினை அறிமுகப்படுத்தியிருந்தார்.*

*மேற்சொன்ன கோவையில் காணப்பட்ட விதிகளே 1806 ஆம் ஆண்டளவில் ஆங்கிலேய ஆளுநர்* Sir Fredrick North *அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு 'முகம்மதியன் கோவை'* (Mohammedan Code) *என பெயரிடப்பட்டு தொகுக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டிருந்தது. பின்னர் மேற்சொன்ன 'முகம்மதியன் கோவை'* (Mohammedan Code) *இல் காணப்பட்டிருந்த திருமண விடயங்களினை அடிப்படையாக கொண்டு 1929 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக விவாகரத்து பதிவு கட்டளைச்சட்டம்* (Muslim Marriage and Divorce Registration Ordinance of 1929) *இயற்றப்பட்டதோடு*

அச்சட்டமே பின்னாளில் *1951* ஆம் ஆண்டின் *13* ஆம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தினால் (Muslim Marriage and Act No 13. of 1951) இனால் முற்றாக பதிலீடு செய்யப்பட்டு *1954* ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பயன்பாட்டில் இருந்து வருகின்றது. அதே போன்று முஸ்லீம்கள் தொடர்பான தனித்துவன சட்டங்களான *1931* ஆம் ஆண்டின் முஸ்லிம் வாரிசுரிமை கட்டளைச்சட்டம் (Muslim Intestate Succession Ordinance of 1931), *1956* ஆம் ஆண்டின் முஸ்லீம் பள்ளிவாயல்கள் மற்றும் தரும நம்பிக்கை (வக்பு) சட்டம் (Muslim Mosques and Charitable Trusts (Wakfs) Act of 1956) ஆகியனவும் மேற்சொன்ன 'முகம்மதியன் கோவை' (Mohammedan Code) இல் காணப்பட்டிருந்த விடயங்களினை பதிலீடு செய்தே இயற்றப்பட்டுள்ளன.

*1951* ஆம் ஆண்டின் *13* ஆம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் (Muslim Marriage and Act No 13. of 1951) அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே அச்சட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள இஸ்லாமிய விதிகள் சார்ந்த அடிப்படை மற்றும் நடபடி முறை சார்ந்த விடயங்களில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்ற பல்வேறு தரப்பினராலும் பல வாதப்பிரதிவாதங்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் கடந்த காலங்களில் பின்வரும் *07* திருத்தச் சட்டங்கள் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

1. Amendment Act No. 31 of 1954
2. Amendment Act No. 22 of 1955
3. Amendment Act No. 01 of 1965
4. Amendment Act No. 05 of 1965
5. Amendment Act No. 32 of 1969
6. Amendment Law No. 41 of 1975
7. Amendment Act No. 24 of 2013.

மேற்சொன்ன திருத்தச்சட்டங்கள் அனைத்துமே முஸ்லீம்கள் சார்பில் பிரதானமாக வேண்டப்படும் அடிப்படை விடயதானங்களுடன் சம்பந்தப்படாமல் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் காணப்பட்ட சில நடபடி (Procedure) விதிகளை திருத்தம் செய்யும் முகமாகவே கொண்டு வரப்பட்டிருந்தன. அத்திருத்தங்களில் *1965* ஆம் ஆண்டைய திருத்த சட்டத்தின் ஊடாக உள்வாங்கப்பட்டுள்ள அமைச்சருக்கு பதிலான நீதிச்சேனை ஆணைக்குழுவின் வகிபாகத்தினை தவிர்த்து பாரியளவான மாற்றங்கள் எதுவுமே இடம்பெற்றிருக்கவில்லை. எனினும் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் பல்வேறு தரப்பினரும் வேண்டி நிற்கும் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் காலத்துக்கு காலம் பல்வேறு குழுக்கள் (உதாரணமாக: 1970 – Headed by Dr.H.M.Z.Farouque, 1984 - Reform Committee, 1990 – Headed by Dr.A.M.M.Shahabdeen, 2009 –18 Member committee headed by Justice Saleem Marsoof PC, 2020 – 10 Member Advisory Committee) தாபிக்கப்பட்டிருந்தன. அவற்றில் பல குழுக்கள் தொடர்ச்சியான செயற்பாட்டினை மேற்கொண்டிருந்த

போதும் இன்று வரையில் அவையெதுவும் நடைமுறையில் வெற்றியளித்திருக்கவில்லை.

மேற்சொன்ன குழுக்களில் 2009 ஆம் ஆண்டளவில் அப்போதைய நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சரான மிலிந்த மொரகொட அவர்களால் நியமிக்கப்பட்ட நீதிபதி. சலீம் மர்சூப் தலைமையிலான குழுவானது குறிப்பிட்டு நோக்கப்படக்கூடியதொன்றாகும். ஏனெனில் அக்குழுவினர் அனைவரும் நடைமுறையிலுள்ள முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டமானது கட்டாயம் மறுசீரமைப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதில் கருத்தொற்றுமைப்பட்டிருந்தனர். அத்தோறு மறுசீரமைப்பு விடயதானங்களுக்காக முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் தொடர்பான 20 விடயங்களை அடையாளம் கண்டு பல தொடரச்சியான கலந்துரையாடல்களையும் ஆய்வுகளையும் மேற்கொண்டிருந்தனர். இறுதியில் (1) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்ட பிரயோகத்திற்கான அடிப்படை சட்டம் (2) திருமணம் மற்றும் விவாகரத்துக்களுக்கான கட்டாய பதிவு (3) குவாஸி நீதிமன்றங்களின் தகைமைகளை உயர்த்தல் (4) பெண்கள் காழி நீதிபதியாக நியமிக்கப்படல் (5) திருமணத்திற்கான குறைந்த வயதெல்லை (6) காழி நீதிமன்றங்களில் சட்டத்தரணிகளின் பிரசன்னம் ஆகிய விடயங்கள் தவிரத்து ஏனைய விடயங்களில் கருத்தொருமித்து பல்வேறு காத்திரமான முன்மொழிவுகளை இரு தரப்பினராக சமர்ப்பித்திருந்தனர்.

இவ்வாறு இஸ்லாமிய மார்க்க நிபுணர்கள், உள்நாட்டு சட்டத்துறை வல்லுநர்கள் மன்றும் ஏனைய துறைசார் நிபுணர்கள் என பலரும் பங்கெடுத்து ஆய்வு செய்து சமர்ப்பித்திருந்த கருத்தொமிருத்த விடயங்களினை கூட முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்திற்குள் உள்வாங்குவது இன்றுவரையில் நடைமுறைச் சாத்தியமாகியிருக்கவில்லை என்பது பெரும் சவாலாகவே இருந்து வருகின்றது.

## 2. முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் 'மதப்பிரிவு' இனது உள்ளடக்கம்.

இஸ்லாமிய சட்டவியலை பொறுத்தவரை முஸ்லிம்களுக்கான பொதுவான அடிப்படை சட்டம் (Substantive Law) 'ஷரிஆ' சட்டமாகும். ஆனால் இலங்கையில் முஸ்லிம்களின் மீது பிரயோகிக்கப்படும் 1951 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டமானது பல்வேறு 'ஷரிஆ' சட்டக் கோட்பாடுகளிலிருந்து பல இடங்களில் வேறுபடுவதனை அவதானிக்கலாம். ஏனெனில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் தோற்றுவாய்களில் அக்கால முஸ்லிம்களின் வழக்காறுகள் உள்வாங்கி காணப்பட்டதே இதற்கான பிரதான காரணமாகும். இந்நிலையில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்திற்கான அடிப்படை சட்டமாக (Substantive Law) எதனை பிரயோகிப்பது என்பது தொடர்பில் அச்சட்டமே தெளிவான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. அச்சட்டத்தின் பிரிவு 98(2) ஆனது முஸ்லிம் விவாக விவாகரத்து சம்பந்தமான எல்லா விடயங்களிலும் அந்நபர் எம்மதப்பிரிவினை சேர்ந்த நபராக இருப்பாரோ அந்நபரினை ஆளும் முஸ்லிம் சட்டப்பிரகாரம் அவர் தொடர்புடைய விடயம் தீர்மானிக்கப்பட வேண்டும் என

ஏற்பாடு செய்துள்ளது. அதே போன்று அச்சட்டத்தின் பிரிவு *16* ஆனது "…… சம்பந்தப்பட்ட தரப்பினர் எம்மதப்பிரிவினை சேர்ந்தவரோ அந்நபரினை ஆளும் முஸ்லிம் சட்டப்பிரகாரம்…." என்ற வாசகங்களை உள்ளடக்கி காணப்படுகின்றது

***Section 98(2):***

***It is hereby further declared that in all matters relating to any Muslim marriage or divorce, the status and the mutual rights and obligations of the parties shall be determined <u>according to the Muslim law governing the sect to which the parties belong</u>.***

***Section 16:***

***Nothing contained this Act shall be construed to valid or invalid, by reason only of registration or non-registration, any Muslim marriage or divorce which is otherwise invalid or valid, as the case may be, <u>according to the Muslim law governing the sect to which the parties to such marriage or divorce belong"</u>***

இந்நிலையில் எமது முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டமானது 'மதப்பிரிவு' (Sect) என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணம் எதனையும் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை. எனவே இச்சட்டத்தில் கூறப்படும் 'மதப்பிரிவு' (Sect) என்பது தற்காலத்தில் முஸ்லிம்களிடையே காணப்படும் இரண்டு பிரதான மதப்பிரிவு (Major Sects) ஆன 'சுன்னி' (Sunni) மற்றும் ''ஷியா' (Shiah) என்பனவற்றை குறிக்கின்றதா அல்லது 'சுன்னி' பிரிவினரின் உட்கூறு சிந்தனைப்பள்ளிகள்-மத்ஹப்கள் ஆன (School of thoughts-Mazhab) 'ஷாபி' 'ஹனபி', 'மாலிகி', 'ஹன்பிலி' ஆகியவற்றினையும் 'ஷியா' பிரிவினரின் உட்கூறு சிந்தனைப்பள்ளிகள்-மத்ஹப்கள் ஆன (School of thoughts-Mazhab) 'இத்னா அஷாரி', 'இஸ்மாயிலி', 'ஸெய்தி' ஆகியவற்றினையும் குறிக்கின்றதா என்ற கேள்வி இங்கு எழுகின்றது. இதற்கான விடையினை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் பிரிவு *25(1)* இனை ஆராய்கின்ற போது பெற்றுக்கொள்ளலாம். அதாவது மேற்சொன்ன பிரிவு *25(1)* ஆனது 'வலி' சொல்ல தகுதியான நபரினது பிரசன்னம் மற்றும் சம்மதம் ஆகியவற்றை கூறுகின்ற போது "…..ஷாபி மதப்பிரிவை சேர்ந்த பெண்ணாக இருக்கின்ற போது…" என்ற வாசங்களை உள்ளடக்கி இருப்பதன் மூலம் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் கூறும் 'மதப்பிரிவு' (Sect) என்ற வாசகம் 'சுன்னி' பிரிவினரின் உட்கூறு சிந்தனைப்பள்ளிகள்-மத்ஹப்கள் (School of thoughts-Mazhab) ஆன 'ஷாபி' 'ஹனபி', 'மாலிகி', 'ஹன்பிலி' ஆகியவற்றினையும் 'ஷியா' பிரிவினரின் 'இத்னா அஷாரி', 'இஸ்மாயிலி', 'ஸெய்தி' ஆகியவற்றினையே குறிக்கின்றது என்பது தெளிவாகின்றது.

***Section 25(1):***

***"For the avoidance of doubt it is hereby declared that no contract of marriage of a woman belonging to the <u>Shaffie sect</u> is valid under the law applicable to that sect, unless***

***(a) a person entitled to act as her wali***

***(i) is present at the time and place at which the contract is entered into ; and***

***(ii) communicates her consent to the contract and his own approval thereof :***

மேற்சொன்ன பிரிவுகளை தவிர முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் பிரிவு *18(1)* ஆனது 'வலி' தேவைப்படாத சந்தர்ப்பங்கள் பற்றியும், பிரிவு *19(1)(டி)* ஆனது வலியினது கையொப்பம் பற்றியும், பிரிவு *26(1)* ஆனது 'வலி' ஆக தகுதியற்றவர் அவ்வாறு செயற்பட முடியாது என்பது பற்றியும், பிரிவுகள் *28(1)* மற்றும் *28(2)* ஆகியன மனைவியனால் மேற்கொள்ளப்படும் 'பஸ்ஹ்' பற்றிய நடபடி முறைகளை விபரிக்கும் போதும் அந்நபர் சார்ந்த 'மதப்பிரிவு' (Sect) என்ற வாசஙக்களை உள்ளடக்கி அவ்விடயங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தியுள்ளன.

***Section 18(1):***

***"……………..………………………………………………………………………………***

***Provided that the declaration by a wali shall not be required in any case where the consent of a wali has been dispensed with under section 47 or where no wali is necessary <u>according to the Muslim lavw governing the sect to which the bride belongs;</u>"***

***Section 19(b):***

***"in every case where the consent of the wali has not been dispensed with under section 47 and is required <u>by the Muslin law governing the sect to which the bride belongs</u>, the wali of the bride; and"***

***Section 26(1):***

***"No person shall knowingly act as wali at the marriage of a Muslim woman, unless he is <u>entitled according to the Muslim law governing the sect to which the bride belongs,</u> to act as wali to that bride."***

***Section 28(1):***

***"Where a wife desires to effect a divorce from her husband, without his consent, on the ground of ill-treatment or on account of any act or***

***omission on his part which amounts to a " faul" <u>under the Muslim law governing the sect to which the parties belong</u>, the procedure laid down in the Third Schedule shall be followed.”***

***Section 28(2):***

***“Where a wife desires to effect a divorce from her husband on any ground not referred to in sub- section (1), being a divorce of any description permitted to a wife <u>by the Muslim law governing the sect to which the parties belong,</u> the procedure laid down in the Third Schedule shall be followed so far as the nature of the divorce claimed in each case renders it possible or necessary to follow that procedure.”***

முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் கூறும் ‘மதப்பிரிவு’ (Sect) என்ற விடயம் தொடர்பில் பின்வரும் விடயங்கள் கவனிக்கத்தக்கன. இலங்கையினை பொறுத்தவரை இங்கு வசித்து வரும் பெரும்பாலான முஸ்லிம்கள் ‘ஷாபி’ (Shaffie) மத்ஹபினை-சிந்தனைப்பள்ளியினை (Mazhab - School of thoughts) பின்பற்றுபவர்களாகவே அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். எமது நாட்டு நீதிமன்றங்கள் கூட மறுவகையான சான்றுகள் முன்வைக்கப்பட்டால் ஒழிய பொதுவில் உள்ளூர் முஸ்லிம்கள் ‘ஷாபி’ (Shaffie) மத்ஹபினை-சிந்தனைப்பள்ளியினை சேர்ந்தவர்களாகவே கருதப்படுவர் என்றும் அவர்களுக்கு ‘ஷாபி’ (Shaffie) மத்ஹபினை-சிந்தனைப்பள்ளியின் விதிகளே பிரயோகிக்கப்பட வேண்டும் என்றும் பல்வேறு தீர்ப்புக்களில் எடுத்தியும்பியுள்ளன. இந்நிலையில் ஒரு நபர் தான் எந்தவொரு மத்ஹபினை-சிந்தனைப்பள்ளியினையும் சாராதவர் சம்பந்தப்படும் அல்லது இரு வெவ்வேறு மத்ஹபினை-சிந்தனைப்பள்ளியினை சார்ந்தவர்கள் சம்பந்தப்படும் விடயங்களில் தீர்வு காணப்படாத பிரச்சினைகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன.